

அவசர வேளையில்

# இலங்கையின் "முன் மருத்துவமனை பராமரிப்பு" சேவையின் பெருமைக்குரிய ஒரு உறுப்பினராகுங்கள்!





"1990 சுவ செரிய மன்றம்" என்பது சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் கீழ் செயல்படும், இலங்கையின், முன்னோடியான முன்-மருத்துவமனை பராமரிப்பு மற்றும் அவசர ஆம்புலன்ஸ் சேவையாகும்.
"1990 சுவ செரிய மன்றம்" நாடு முழுவதும் 322 ஆம்புலன்ஸ்களுடன் உயிர் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

நாடு முழுவதும் உயிர்களை காப்பாற்ற அர்ப்பணிக்கப்பட்ட அவசர மற்றும் முன்-மருத்துவ பராமரிப்பு ஆம்புலன்ஸ் சேவையை வழங்கும் இந்த நிறுவனத்தில், அவசர மருத்துவ தொழில்நுட்பவியலாளர், ஆம்புலன்ஸ் ஓட்டுநர மற்றும் அவசர மருத்துவ சேவை ஒருங்கிணைப்பாளர் பதவிக்காக தகுதியும் திறமையும் கொண்ட, உற்சாகமிக்க விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## அவசர மருத்துவ தொழில்நுட்பவியலாளர் (EMT) – ஆண்/பெண்

### தகுதி

- 35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- க.பொ.த உயர்தர (A/L) தேர்வில் ஏதேனும் பிரிவில் மூன்று (03) பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். (உயிரியல் பிரிவில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்) அல்லது சுகாதாரத்துடன் தொடர்புடைய துறையில் NVQ நிலை 4 தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.
- க.பொ.த சாதாரண தர (O/L) தேர்வில் ஆங்கிலப் பாடத்தில் குறைந்தது "S" தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
- அடிப்படை தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் மேலதிக மொழித் திறன் கூடுதல் தகுதியாக கருதப்படும்
- அவசர மருத்துவ சேவைகள் (EMS) தொடர்பான முன் அனுபவம் கூடுதல் தகுதியாக கருதப்படும்
- குறைந்தபட்ச உயரம்:
  - ஆண் – 5 அடி 4 அங்குலம்
  - பெண் – 5 அடி 2 அங்குலம்
- உடல் நிறை குறியீடு (BMI): 18.5 – 27
- பார்வைத் திறன்: 20/20 முதல் 20/30 வரை

குறிப்பு: அனைத்து விண்ணப்பதாரர்களும் உடற்தகுதி தேர்வில் தேர்ச்சி பெறுதல் கட்டாயமாகும். தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், 1990 சுவ செரிய மன்றம் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும் டிப்ளோமா பாடநெறியை பின்பற்ற வேண்டும். பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் விண்ணப்பதாரர்கள், குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டுகள் இந்த நிறுவனத்தில் சேவை செய்ய வேண்டியது அவசியம். மூன்று வருட காலம் நிறைவடைந்த பின்னர், பல்வேறு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களும் காத்திருக்கும் என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

## ஆம்புலன்ஸ் ஓட்டுநர் (Pilot)

### தகுதி

- 35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- க.பொ.த சாதாரண தர (O/L) தேர்வில் ஆறு (06) பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
- கனரக வாகன ஓட்டுநர் உரிமத்துடன் நன்மதிப்புமிக்க நிறுவனம் ஒன்றில் குறைந்த பட்சம் இரண்டு வருட சேவை அனுபவத்தினை பெற்றிருத்தல் வேண்டும்
- சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் சிறந்த தொடர்பாடல் திறன் கொண்டிருத்தல் வேண்டும்.
- ஆங்கில மொழித் திறன் கூடுதல் தகுதியாக கருதப்படும்.
- குறைந்தபட்ச உயரம்: 5 அடி 4 அங்குலம்
- உடல் நிறை குறியீடு (BMI): 18.5 – 27
- பார்வைத் திறன்: 20/20 முதல் 20/30 வரை

குறிப்பு: அனைத்து விண்ணப்பதாரர்களும் திறன் தேர்வில் (Aptitude Test) கட்டாயமாகத் தேர்ச்சி பெற வேண்டும்.

## அவசர மருத்துவ சேவை ஒருங்கிணைப்பாளர் (Emergency Medical Dispatcher – EMD)

### தகுதி

- 35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- க.பொ.த உயர்தர (A/L) தேர்வில் எந்தவொரு பிரிவிலும் மூன்று (03) பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
- சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் சிறந்த தொடர்பாடல் திறன்
- ஆங்கில மொழித் திறன் மற்றும் தகவல் தொழில்நுட்ப (IT) அறிவு கூடுதல் தகுதியாக கருதப்படும்

குறிப்பு: அனைத்து விண்ணப்பதாரர்களும் திறன் தேர்வில் (Aptitude Test) கட்டாயமாகத் தேர்ச்சி பெற வேண்டும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை **careers@1990.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது **1990 சுவ செரிய மன்றம், இல. 43, ஹோர்டன் பிளேஸ், கொழும்பு – 07** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலின் மூலம் அனுப்பலாம். மின்னஞ்சல் மூலம் அனுப்பும் போது, **மின்னஞ்சலின் பொருள் வரியில் (Subject Line)** விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாக குறிப்பிட வேண்டும். தபால் மூலம் அனுப்பும் விண்ணப்பங்களில், உறையின் மேல் மையப்பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். அனைத்து விண்ணப்பங்களும் **27.07.2026** அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும்.

1990 சுவ செரிய மன்றம், இல. 43, ஹோர்டன் பிளேஸ், கொழும்பு – 07